**சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்**
**OS.No.36/2020**
**வாதி தரப்பு சாட்சி– 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கற்பகம் | கணவர்/தகப்பனார் பெயர் | : | சிதம்பரம் |
| கிராமம் | : | அரூர் டவுன் | வட்டம் | : | அரூர் |
| தொழில் | | | வயது | : | 50 |

Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the **04th day of April 2025**

PW–1

வாதி வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் வாதி ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

1. 18.04.1996 ம் தேதியிட்ட 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியின் தந்தை சிதம்பரத்தை மிரட்டி கட்டாயப்படுத்தி எழுதிக்கொண்ட பாக பாத்திய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1
2. 26.10.1999 ம் தேதியிட்ட 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து மோசடியாக எழுதிக்கொண்டுள்ள பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2
3. 06.07.2009 ம் தேதியிட்ட வாதியின் தந்தை சிதம்பரம் (எ) சீனிவாசனின் வாரிசு சான்று நகல் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது வா.சா.ஆ.3
4. 04.09.2013 ம் தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளும் 7ம் பிரதிவாதியும் மோசடியாக எழுதிக்கொண்டுள்ள பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4
5. 10.07.2013 ம் தேதியிட்ட தாவா சொத்தை 8ம் பிரதிவாதிக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கிரையஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5

6. 06.07.2015 ம் தேதியிட்ட தாவா சொத்தை 10, 11 பிரதிவாதிகளுக்கு 2ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6

7. 07.11.2019 ம் தேதியிட்ட வாதி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு RPAD ரசீதுடன் அலுவலக நகல் வா.சா.ஆ.7

8. 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் மொத்தம் – 3 அசல் வா.சா.ஆ.8

9. 13.11.2019 ம் தேதியிட்ட 1 முதல் 3 பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கொண்டு வாதிக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு கவருடன் சர்வுடு காப்பி வா.சா.ஆ.9

10. 03.12.2019 ம் தேதியிட்ட கணினி சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.10

மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>1, 3 முதல் 6, 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/–R.Vijayan,

Sub Judge, Harur